**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**

**OS No. 12/2019**

Deposition of witness for Plaintiff side **DW** 1

| | | |
|---|---|---|
| Name and Age | : | கற்பகவள்ளி |
| Father's/Husband Name | : | |
| Village and Taluk | : | |
| Caste and Religion | : | |
| Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 11.06.2025

குறுக்குவிசாரணை

1. நான் வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையை படித்து பார்த்துள்ளேன். அது சம்மந்தமாக வாதி தாக்கல் செய்துள்ள வரைபடத்தையும் படித்து பார்த்துவிட்டேன். அதில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை மூன்றாவது சொத்தாக காண்பித்துள்ளார்கள் என்றால் சரிதான். மூன்றாவது தபசில் சொத்திற்கு அடுத்த கீழ்பக்கம் தனுஷ்கோடிக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். தென்பக்கம் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். மேற்கு பக்கம் பொதுமுடுக்கு உள்ளது என்றால் சரிதான். அந்த பொது முடுக்கு வழியாகத்தான் நாங்கள், கணேச முதலியார் ஆகியோர் வெளியே வர முடியும் என்றால் சரிதான். எங்களுக்கும், தனுஷ்கோடி வாத்தியாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கு வடக்கே கணபதிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்தானது ஆதியில் கரடி முத்து முதலியாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவருக்கு முத்தையா முதலியார், சித்திரைக்கண் முதலியார் ஆகிய இரண்டு மகன்கள் என்றால் சரிதான். முத்தையா முதலியாரின் மகன் தான் வாதியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஒன்னாவது தபசில் சொத்திற்கு கீழ்புறம் ஒண்ணாவது தபசில் இரண்டாவது அயிட்ட சொத்தை சித்திரைக்கண் முதலியாரிடம் இருந்து மாசானம் பெற்று அவரது மகன் கிரைம்

வாங்கியுள்ளார். அவர்கள்தான் முருகேசன், ராணி இந்த வழக்கு இரண்டு, மூணு பிரதிவாதிகள் என்றால் சரிதான். செண்பக முதலியார் இடம் உள்ளது என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் கரடிமுத்து எழுதி கொடுத்துள்ள பத்திரத்தில் ஒன்னாவது தபசில் ஒன்னாவது அயிட்டம் சொத்தானது வடபுறம் தென்புறம் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1, பி.வா.சா.ஆ.2 ஆகிய பத்திரங்களில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 வரைபடம் தவறானது. ஆனால் அதில் தென்வடல் முடுக்கும் தவறானது.வா.சா.ஆ.4 வரைபடத்தில் எனது வீடு சரியா என்றால் சரியல்ல. நான் வீடுகட்டியுள்ள பிராது 3 வது தபசில் சொத்திற்கு எத்தனை அடி தள்ளி வடக்குபுறத்தில் ஹாலோ பிளாக் சுவர் கட்டியுள்ளேன் என்றால் 3 அடி தள்ளி கட்டியுள்ளேன். அந்த ஹாலோ பிளாக் சுவரானது நானும், கரடி முத்து முதலியாரும் பொது சுவராக கட்டியது என்றால் இல்லை. நான் வழக்கிற்காக அந்த சொத்து எனக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அந்த ஹாலோ பிளாக் சுவர் உள்ள H E சுவரோடு எனது வீடு முடிந்து விடுகிறது என்றால் இல்லை. எனது வீட்டிற்கு கீழ் பக்கம் உள்ள தனுஷ்கோடி வாத்தியாருக்கு என்றால் சரிதான். கீழ்ப்பக்கம் நடபாதை உள்ளது என்றால் சரிதான். அதன் வழியாக தெற்கு நோக்கி வந்து விடலாம். கரடிமுத்து முதலியார் வீட்டிற்கு மேற்கே சுடலைமுத்து குமாரர் சிவராம முதலியார் சொத்து உள்ளது. வடக்கு பக்கம் கற்பக வேளார் சொத்து உள்ளது. அவர்களுக்கு நடைபாதை மேற்கே உள்ளது பிராது இரண்டாவது தபசில் சொத்து வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியமானது, அதில் எனக்கு எந்த வித பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு மூன்றாவது இலக்க சொத்தினை கிரயம் கொடுத்த கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரைய பத்திரத்தை தாக்கல் செய்தால் வடபக்கம் உள்ள இரண்டாவது இலக்க சொத்து வாதிக்கு பாதிக்கப்பட்டது என்று தெரிந்துவிடும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் இரண்டாவது இலக்க சொத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்ததால் தான் வாதி என் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த ஹாலோ பிளாக் என்பது காம்பவுண்ட் சுவர் அதற்கு தெற்கு தான் வீடு உள்ளது என்றால் சரிதான் அந்த ஹாலோ பிளாக் உள்ள சுவர் உள்ள இடத்தில் ஏற்கனவே

மன்னாலான காம்பவுண்ட் சுவர் இருந்தது என்றால் சரியல்ல. நான் அதை வழக்கிற்காக மறைத்து தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆனால் வாதி கோரிய படி வழக்குரையில் உள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல 25 ஆயிரம் வருட.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.06.13 13:30:20 +0530

District Munsif cum Judicial Magistrate, Shenkottai